**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L. L. M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் 26 ஆம் நாள்.

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை

TNMY09–000010–2026

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 33/2026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>பெரம்பூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 68/2023 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | மணிகண்டன்,28/2026<br>த/பெ மூர்த்தி<br>காலனிதெரு, இந்திராநகர், கொடைவிளாகம்,<br>தரங்கம்பாடி தாலுக்கா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 19.02.2023 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 19.02.2023 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 24.02.2023 | 01.03.2023 |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 28.02.2023 | |
| 7 | பிரிவு 230(1)BNSS ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வினவப்பட்ட நாள் | : | 20.02.2026 | |



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 18:27:50 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | பிரிவு 355 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | 1) புகார்தாரர் தரப்பில் U/s 359 (ii) of BNSSன் கீழ் 04.3.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.01/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.<br>2) அரசு தரப்பில் U/s 348 of BNSS ன் கீழ் 06.3.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.02/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | |
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 04.03.2026 | 04.03.2026 |
| | | | அ.சா.2 | 04.03.2026 | 04.03.2026 |
| | | | அ.சா.3 | 06.03.2026 | 06.03.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் வினவிய நாள் | : | 07.03.2026 | | |

இவ்வழக்கு 12.01.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 07.03.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. B. செந்தில்வடிவு தரங்கம்பாடி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருV.S, பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 19.02.2023ம் தேதி 14.00 மணியளவில் கொடைவிளாகம் இந்திரா நகரில் எதிரியின் அக்காவும், அவரது கணவரும் வாதி வீட்டுக்கு வந்து வாதியுடன் பேசிக்கொண்டிருந்தபோது எதிரி அவர்களை அழைத்ததாகவும், வாதி கொஞ்ச நேரம் எங்கள் வீட்டில் பேசி விட்டு வரட்டும் என்று சொன்னபோது எதிரி வாதியை ஏண்டி குச்சிக்காரி, தேவிடியா உன் வேலையை பாருடி என திட்டிக்கொண்டே, வாதியின்



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 18:27:58 +0530

வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, வாதியை மானப்பங்க படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு வாதியின் தலைமுடியை பிடித்து வீட்டிற்கு வெளியே இழுத்து வந்து வாதி அணிந்திருந்த நைட்டியை கிழித்து மானப்பங்க படுத்தி அவரை கீழே தள்ளியும், காலால் எட்டி உதைத்தும், வாசலில் கிடந்த கம்பை எடுத்து வாதியின் வலது கை மற்றும் கழுத்தில் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தியும், வாதியை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், பிரிவு 230 BNSS ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**:–

6. **அ.சா.1 தமிழ்வாணி** தனது சாட்சியத்தில், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தான் வீட்டில் இருந்தபோது தங்கள் தெருவில் சிலர் கூட்டமாக தகராறு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 18:28:06 +0530

செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்றபோது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ தன்னை தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், அந்த கூட்டத்தில் எதிரி இருந்ததாலும், அவருக்கும் தங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர் தான் தன்னை தாக்கியிருக்கக்கூடும் என நினைத்து அவர் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டதாகவும், நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் **புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ.1 ஆன கையொப்பம்** தன்னுடையது தான் என்றும் பிறழ் சாட்சியமாக அளித்துள்ளார்.

7. **அ.சா.2 ஆரோக்கியதாஸ்** தனது சாட்சியத்தில், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. **அ.சா.3 அகோரமூர்த்தி** தனது சாட்சியத்தில் தற்போது பெரம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோபால், உதவி ஆய்வாளர்கள் ராஜேந்திரன் மற்றும் ஜெய்சங்கர் ஆகியோர்களின் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 19.02.2023ஆம் தேதி 17.00 மணிக்கு பெரம்பூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோபால் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது தமிழ்வாணி க/பெ. சுந்தரேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.2 ஆன புகார் மனுவை** பெற்று காவல் நிலைய குற்ற எண். 68/2023, இதச பிரிவுகள் 294(b), 448, 323, 354, 506(i) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கின் **அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையினை** பதிவுசெய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. மேற்படி வழக்கு கோப்புகளை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அவர் வழக்கினை மேல் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலியபெருமாள் மற்றும்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 18:28:13 +0530

மதன் ஆகியோர்கள் முன்னிலையில் **அ.சா.ஆ.4 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடம்** தயார் செய்தார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார் என்றும், அசா1க்கு வெளியாங்கள் எதுவும் இல்லாததாலும் அவர் மருத்துவ சிகிச்சைக்கு செல்லாததாலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகான இதச பிரிவுகள் 294(b), 448, 323, 354, 506(i) ல் இருந்து இதச பிரிவுகள் 294(b), 448, 354, 506(i), 352 ஆக மாற்றம் செய்து **அ.சா.ஆ.6 ஆன சட்டப்பிரிவு மாற்று அறிக்கை** தயார் செய்தார் என்றும், பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து இதச பிரிவுகள் 294(b), 448, 354, 506(i), 352 ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுவிட்டதால் அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 2 மற்றும் 4 முதல் 9 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் எதிரிக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

12. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

13. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 18:28:20 +0530

**தீர்வு**

14. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

15. அ.சா.1 தனது புகார் மனுவில், கடந்த 19.02.2023ம் தேதி 14.00 மணிக்கு எதிரி அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகவும், அ.சா.1ஐ மானப்பங்க படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு அவரது தலைமுடியை பிடித்து வீட்டிற்கு வெளியே இழுத்து வந்து அ.சா.1ன் நைட்டியை கிழித்து மானப்பங்க படுத்தி காலால் எட்டி உதைத்ததாகவும், கம்பால் அ.சா.1ன் வலது கை மற்றும் கழுத்தில் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1ற்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறிவிட்டு அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தான் வீட்டில் இருந்தபோது தங்கள் தெருவில் சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்றபோது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ தன்னை தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், அந்த கூட்டத்தில் எதிரி இருந்ததாலும், அவருக்கும் தங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர் தான் தன்னை தாக்கியிருக்கக்கூடும் என நினைத்து அவர் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 அரசு தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரியோடு சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

16. இவ்வழக்கினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் அவர் அரசுதரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியம் நம்பக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 18:28:28 +0530

நுழைந்ததாகவோ, அ.சா.1ஐ மானப்பங்கபடுத்தவேண்டும் நோக்கத்தோடு அவரது தலைமுடியை பிடித்து இழுத்து வந்து நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து கீழே தள்ளி காலால் எட்டி உதைத்ததாகவோ, அ.சா.1ஐ கம்பால் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

18. எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 354, 352, 506(i) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 271(1) BNSS –ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

22. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.10 18:28:35 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 18:28:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**அட்டவணை :–**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:–**

அ.சா.1 – தமிழ்வாணி

அ.சா.2– ஆரோக்கியதாஸ்

அ.சா.3 – அகோரமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

அ.சா.ஆ.1 – புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்

அ.சா.ஆ.2 – புகார்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 – சட்டப்பிரிவு மாற்று அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u> :–** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள்</u> :–** இல்லை

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.10 18:28:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2. எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.